செய்தி வெளியீடு எண்: 400 நாள்: 28.02.2024

# செய்தி வெளியீடு

**சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.111.35 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ள பாசன கட்டமைப்புகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பில், கொள்ளிடம் ஆற்றில் ரூ.414 கோடி செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நீரொழுங்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்து,**

**அதீத கனமழையால் பாதிக்கப்பட்ட 6 தென் மாவட்டங்கள் மற்றும் மிக்ஜாம் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் ரூ.726.50 கோடி மதிப்பீட்டில் 503 நிரந்தர சீரமைப்பு, வெள்ளத் தணிப்பு மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,**

**தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் ரூ.115 கோடி செலவில் 1004 சிறப்பு தூர்வாரும் பணிகள்**

**மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 111 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பாசன கட்டமைப்புகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பில், கொள்ளிடம் ஆற்றில் 414 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நீரொழுங்கி ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். மேலும், அதீத கனமழையால் பாதிக்கப்பட்ட 6 தென் மாவட்டங்கள் மற்றும் மிக்ஜாம் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 726.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 503 நிரந்தர சீரமைப்பு, வெள்ளத் தணிப்பு மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் 115 கோடி ரூபாய் செலவில் 5814.295 கி.மீ. நீளத்திற்கு 1004 சிறப்பு தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்தார்.

## நீர்வளத்துறை சார்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பாசன கட்டமைப்புகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தல்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம், மிளகனூர் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்க வைகை ஆற்றின் குறுக்கே 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில், 6,316.41 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள அணைக்கட்டு;

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் – புன்னக்காயல் மற்றும் சேர்ந்தமங்கலம் கிராமங்கள், திருவைகுண்டம் வட்டம் – முக்காணி கிராமம் ஆகியவற்றில் தாமிரபரணி ஆறு கடலில் கலக்குமிடத்தில் 46 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் 2,976 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கடைமடை தடுப்பணைகள்;

தூத்துக்குடி மாவட்டத்தில் 34 கோடியே 61 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் 12,447 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கடம்பாகுளம் மிகுதி வழிந்தோடி மற்றும் மருதூர் மேலக்கால் வெள்ள தடுப்பு பணிகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், முக்கொம்பில் கொள்ளிடம் ஆற்றில் 414 கோடி ரூபாய் செலவில் 12 இலட்சத்து 58 ஆயிரத்து 460 ஏக்கர் பாசன பரப்பு பயன்பெறும் வகையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நீரொழுங்கி;

என மொத்தம் 525 கோடியே 35 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவிலான பாசன கட்டுமானங்கள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**இத்திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்ததன் மூலம் சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் டெல்டா மாவட்டங்களில் மொத்தம் சுமார் 12 இலட்சத்து 80 ஆயிரத்து 200 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுவதோடு, வெள்ள பாதிப்புகளும் தணிக்கப்படும்.**

**<u>திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அதீத கனமழை காரணமாக சேதமடைந்த பாசன கட்டமைப்புகளில் 480 நிரந்தர சீரமைப்பு பணிகள் அடிக்கல் நாட்டுதல்</u>**

தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த **அதி கனமழையால் வெள்ள பாதிப்புக்குள்ளான நீர்ப்பாசன கட்டமைப்புகளில் உடனடியாக நிரந்தர சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் 102.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 223 பணிகள், தென்காசி மாவட்டத்தில் 19.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 67 பணிகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 4.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17 பணிகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 152.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 155 பணிகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 பணிகள், விருதுநகர் மாவட்டத்தில்**

**1.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 பணிகள், என மொத்தம் 280 கோடி மதிப்பீட்டிலான 480 பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மேற்கண்ட தென்மாவட்டங்களில் நிரந்தர சீரமைப்பு பணிகள் 269 கண்மாய்கள், 171 கால்வாய்கள், ஆறுகளில் 31 இடங்கள் மற்றும் 9 அணைக்கட்டுகளில் மேற்கொள்வதன் மூலம், திருநெல்வேலி மாவட்டத்தில் 88,365 ஏக்கர், தென்காசி மாவட்டத்தில் 88,112 ஏக்கர், தூத்துக்குடி மாவட்டத்தில் 51,965 ஏக்கர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 7,754 ஏக்கர், ராமநாதபுரம் மாவட்டத்தில் 4,200 ஏக்கர் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் 5,094 ஏக்கர், என மொத்தம் **2,45,490** ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைவதோடு, வெள்ள பாதிப்புகளும் தணிக்கப்படும்.

**<u>சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 23 வெள்ளத்தணிப்பு மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்</u>**

மிக்ஜாம் புயலால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை தவிர்க்கும் பொருட்டும், சிதிலமடைந்த நீர்நிலை கட்டுமானங்களை மீள புதுப்பிக்கவும் உடனடியாக நிரந்தர சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள 22 வெள்ளத்தணிப்பு மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழையின் காரணமாக வெள்ள பாதிப்புக்குள்ளான தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தணிப்பு பணியான இரும்புலியூர் ஏரியிலிருந்து ஜிஎஸ்டி சாலை வரை மூடுவடிகால் உருவாக்கம், பீர்க்கன்காரணை ஏரியிலிருந்து இரும்புலியூர் வரை வெள்ள நீர்ப்போக்கு கால்வாய், ஜிஎஸ்டி சாலை மற்றும் முடிச்சூர் சாலையை இணைக்கும் சுரங்க நீர்வடிகால் ஆகிய பணிகள் 96.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 446.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 23 பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதன் மூலமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட செம்பாக்கம், நன்மங்கலம், தாம்பரம், மூவரசம்பேட்டை, கீழ்கட்டளை, நாராயணபுரம், பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதிகள், நேமம், வீச்சூர், ஜெயராமபுரம், குதிரைப்பள்ளம், சேக்காடு, கெருகம்பாக்கம். மணப்பாக்கம், புழல், பொன்னேரி, நரவாரிகுப்பம், பூந்தமல்லி, சோழவரம் மற்றும் திருவொற்றியூர் பகுதிகள் பயனடைவதோடு வெள்ள பாதிப்புகளும் தணிக்கப்படும்.

**<u>தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் 5814.295 கி.மீ நீளத்தில் தூர்வாரும் பணி மேற்கொள்ள 1004 சிறப்பு தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்தல்</u>**

சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் 5814.295 கி.மீ நீளத்திற்கு 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் மற்றும் வடிகால்களில் சிறப்பு தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்தூர்வாரும் பணிகளை செயல்படுத்துவதன் மூலமாக 14,55,680 ஏக்கர் பாசனப்பரப்பு பயன்பெறும். மேலும், நீர் ஒட்டம் பராமரிக்கப்பட்டு அதனை சுற்றியுள்ள ஆழ்துளை கிணறுகள், திறந்த கிணறுகளில் நிலத்தடி நீர்மட்ட அளவும் மற்றும் நீரின் தரமும் மேம்படும்.

**<u>நீர்வளத்துறை சார்பில் செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.4.48 கோடி மதிப்பிலான 50 ஈப்புகள் வழங்குதல்</u>**

மாநிலத்தின் அனைத்து பகுதிகளில் உள்ள செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் சுமார் 20 ஆண்டுகள் பழமையானதால், திட்ட ஆய்வு பணிகளை செவ்வனே மேற்கொள்ளும் வகையில் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் (TNIAM PROJECT) கீழ் புதிய வாகனங்கள் வழங்கிடும் விதமாக 4 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட 50 ஈப்புகளை நீர்வளத்துறையின் செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவ்வாகனத்திற்கான சாவிகளை செயற்பொறியாளர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்ட இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.தென்காசி சு. ஜவகர், இ.ஆ.ப., நீர்வளத்

துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.அ.முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். கதிரவன், திரு. என். தியாகராஜன், திரு. எம். பழனியாண்டி, திரு. எஸ். ஸ்டாலின் குமார், திரு. அ. சௌந்தரபாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். பிரதீப் குமார், இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு. மு. அன்பழகன், மாநகராட்சி ஆணையர் திரு. வெ. சரவணன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும்;

சிவகங்கை மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி அ. தமிழரசி, திரு. எஸ். மாங்குடி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும்;

தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. லட்சுமிபதி, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in